பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

NEW MASTER INSTITUTE
B. M. C. Lane,
JAFFNA.
91 A/L
(Sat & Sun)
பிரிவு I
7 30 - ZOOLOGY
8.30 - BOTANY
10.30 - CHEMISTRY
11.30 - PHYSICS
7.30 - PURE & APPLIEDMATHS

# உதயன்

விலை ரூ2/50

NEW MASTER INSTITUTE
B. M. C Lane,
JAFFNA.
91 A/L
Week End Classes
பிரிவு II
விரைவில்
ஆரம்பம்

சுடர்: 4 சுக்கில ஸ்ரீ ஆடி மீ 04 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1409 ஜுல்ஹஜ் பிறை 15 (19 - 07 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:- 192

புளொட் இயக்கத்தின் செயலதிபர்

# உமா மகேஸ்வரன் கொழும்பில் கொலை

## இனந்தெரியாதவர்கள் சுட்டனர்

கொழும்பு, ஜுலை 19

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்டின்) செயலதிபர் திரு. உமா மகேஸ்வரன் (வயது 40) கடந்த ஞாயிறு இரவு சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொழும்பு, பம்பலப்பிட்டி பிராங்போர்ட் பிளேஸில் வைத்து இனந் தெரியாத நபர்கள் அவரைச் சுட்டுக் கொன்றனர்.

மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோதே இவர் சுட்டுக்கொல்லப் பட்டார் என பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவம் குறித்து கொழும்பில் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்ததாவது:—

கடந்த ஞாயிறு இரவு 8 மணியளவில் கொழும்பில் பொலீஸ் அவசரப் பிரிவுக்கு அனமதேய தொலைபேசி அழைப்பு ஒன்று கிடைத்தது.

காலி வீதியில்பிராங்க்போர்ட் பிளேஸுக்கு அருகில் நடந்து சென்று கொண்டிருந்த ஒருவர், பின்பகுதியில் இருந்து சுடப்பட்டார் என்ற செய்தி தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்தவரிடம் இருந்து இரண்டு தேசிய அடையாளக் கார்ட்டுகள் கைப்பற்றப்பட்டன.

ஒன்று நவாஸ் என்ற பெயரிலும் மற்றது கதிர்காமநாதன் என்ற பெயரிலும் இருந்தன.

இறந்தவரிடம் பை ஒன்றும் இருந்தது.

இறந்தவர் யார் என்று உடனே அடையாளங் காணப் படவில்லை.

பொலீஸ் ''கோப்புகளில்'' உள்ள படத்தை வைத்து இறந்தவர், தீவிரவாதத் தலை

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஈரோஸ் பட்டியல் மூலம்

## மலையக பிரதிநிதியும் எம். பியாக நியமனம்

ஈழவர் ஜனநாயக முன்னணியின் எம். பிக்கள் பட்டியலில் மலையகத்தைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவருக்கும் இடம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட எம். பிக்கள் பட்டியலிலேயே மலையகத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபரான திரு. எம். இராமலிங்கம் (வயது 48) என்பவருக்கு இடம்வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. இராமலிங்கம் இராகலை மகா வித்தியாலய அதிபராகப் பணிபுரிகிறார்.

இதேவேளை கிழக்கு மாகாண எம். பிக்கள் பட்டியலில் மேலும் ஒரு முஸ்லிம் உறுப்பினருக்கு இடம் வழங்கப்பட்டிருக்கிறது.

ஈழவர் ஜனநாயக முன்னணி எம். பிக்கள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்ய இருப்பது தெரிந்ததே. (உ-10)

## கொழும்பு ரயில் சேவை மீண்டும் வார இறுதியில்

யாழ் - கொழும்பு வார இறுதி ரயில் சேவைகள் இவ் வார இறுதியில் நடைபெறக் கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.

கடந்த சில வாரங்களாக தடைப்பட்டிருந்த இச்சேவைகள் மீண்டும் இவ்வாரத்தில் ஆரம்பிக்க ரயில்வே திணைக்களம் முயற்சி எடுத்துள்ளது. (உ-3)

## நெல்லியடிப் பகுதியில் கிரனேட், ஷெல் வீச்சுகள்!

கரவெட்டி, ஜுலை 19

நெல்லியடி நவிண்டில் பகுதிகளில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கிரனேட் வீச்சுச் சம்பவங்கள் இடம்பெற்றன.

அதையடுத்து ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

நெல்லியடியில் காலையிலும், நண்பகல் நேரத்திலும் கிரனேட்டுகள் வீசப்பட்டன.

இதனைத் தொடர்ந்து சரமாரியான வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. ஷெல்களும் ஏவப்பட்டன.

ஷெல்வீச்சில் நெல்லியடியிலுள்ள ஒரு வியாபார நிலையம் சேதமானது. இரும்பு மதவடிப்பகுதி தோட்டங்களிலும் ஷெல்கள் வீழ்ந்துவெடித்தன.

அதேதினம் மாலை 5.30 மணியளவில் நவிண்டில் சாண்டா சந்தைப் பகுதியிலும் கிரனேட் வீச்சுச் சம்பவம் இடம்பெற்றது. இதைத் தொடர்ந்து இரும்புமதவடியை நோக்கி ஷெல்கள் ஏவப்பட்டன. (ஓ-70)

### பொலிகண்டியிலும் அசம்பாவிதம்

வல்வெட்டித்துறை, ஜுலை 19

பொலிகண்டிப் பகுதியில் இருந்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை துப்பாக்கிப் பிரயோகங்களும், ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

இத்தாக்குதல்களுக்கான காரணம் எதுவும் தெரியவரவில்லை.

இதனால் பீதியுற்ற மக்கள் இடம்பெயர்ந்தனர். கடற்கரையை அண்டிய மக்களே பெருமளவில் இடம்பெயர்ந்தனர்.

பெரும்பாலான மீனவர்கள் தொழிலுக்குச் செல்லவில்லை. (ஓ-160)

முச்சந்தி முரளி



எங்களின்ரை நாட்டுப் பொருளாதார நிலைமை வலு மோசமாய்ப் போய்க் கொண்டிருக்குது எண்டு சொல்லுங்கோ......!

## நகரில் வழமை நிலை!

யாழ்ப்பாணம், ஜுலை 19

கடந்த நான்கு நாட்களாக சோபையிழந்து காணப்பட்ட யாழ் நகரம் நேற்று சுறுசுறுப்புடன் காணப்பட்டது.

நேற்று போயாதினம் என்ற போதிலும் அனேகமானகடைகள் திறக்கப்பட்டு இருந்தன. போக்குவரத்துச் சேவைகளும் வழமைக்குத் திரும்பி இருந்தன.

யாழ் - கொழும்பு தனியார் பஸ் சேவையும் நேற்று மீண்டும் ஆரம்பமானது.

யாழ். ஆஸ்பத்திரி வெளி நோயாளர் பிரிவுக்கும் அதிக எண்ணிக்கையானோர் சிகிச்சைக்கு வந்திருந்தனர். (ஓ-3 9-10)

## திருமலையில் 21 பேர் பலி?

திருகோணமலையில் ஏற்பட்ட மோதல் சம்பவம் ஒன்றில் 21 பேர் உயிரிழந்ததாக வெரித்தாஸ் வானொலி நேற்றிரவு அறிவித்தது.

உயிரிழந்தவர்களில் பத்துப் பேர் பொதுமக்கள் என்றும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (உ)

இரகசிய செய்திகளைப் பரிமாறுவதற்கு

# இந்தியத் தூதரகங்களில் திடீரென 'ஃபெக்ஸ்' இயந்திரங்கள் இணைப்பு

புதுடில்லி, ஜுலை 18

புதுடில்லியில் உள்ள வெளியுறவுத்துறை அமைச்சுடன் இரகசிய செய்திகளைப் பரிமாறிக் கொள்வதற்கு வசதியாக உலகின் பல பாகங்களிலும் உள்ள இந்தியத் தூதரகங்களுக்கு திடீரென ஃபெக்ஸ் இயந்திரங்கள் இணைக்கப்பட்டு வருகின்றன.

தொலைபேசி மூலம் செய்தி பரிமாறும் போது அவை ஒட்டுக் கேட்கப்படலாம் என்ற அச்சத்தினாலேயே புதிய நடவடிக்கைகளை இந்திய வெளியுறவுத்துறை எடுத்திருக்கிறது.

ஃபெக்ஸ் இயந்திரத்திற்குள் செலுத்தப்படும் ஒரு கடிதத்தின் பிரதியை பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள இன்னொரு இடத்தில் சில செக்கன்களுக்குள் பெற்றுக் கொள்ளலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

தொலைத்தொடர்பு மூலம் இக்கருவி இயங்கினாலும் இக் கருவி மூலம் பரிமாறப்படும் செய்திகளை ஒட்டுக்கேட்கவோ களவாடவோ முடியாது.

இது தொடர்பாக இந்தியப் பத்திரிகை ஒன்றில் வந்த செய்திக்கட்டுரை வருமாறு:-

ஜுன் முதல் திகதியன்று இந்திய இராணுவமே வெளியேறு என்று இலங்கை ஜனாதிபதி பிரேமதாச குரல் கொடுத்த நொடியிலிருந்து, பிரதமர் ராஜீவின் செயலகம் தூங்கவேயில்லை.

பிரதமரின் செயலகத்தின் முதன்மைச் செயலாளர் பி. ஜி. தேஷ்முக்கும், மத்திய அமைச்சரவைச் செயலாளர் டி. என். சேஷனும் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை மீண்டும் மீண்டும் படித்துப் பார்த்தனர்.

ஜுன் மூன்றும் திகதி இரவுக்குள் அவர்கள் சில முக்கிய முடிவுகளை எடுத்தனர். பிரதமரிடம் கலந்தாலோசித்த பிறகு, தாங்கள் எடுத்த இரண்டு பக்க இரகசிய முடிவுகளை இராணுவத்துக்கும்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

அமைதிப்படை விவகாரம்:

## மத்திய அரசின் நிலையையே தமிழக அரசும் பின்பற்றும்

### கலைஞர் கருணாநிதி கூறுகிறார்

இலங்கைத் தமிழர் பிரச்சினையைப் பொறுத்தவரை மத்திய அரசின் நிலையையே தமிழக அரசும் கொண்டிருக்கிறது.

முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி கோயம்புத்தூரில் செய்தியாளர்களிடம் பேசுகையில் இத் தகவலைத் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழருக்குப் போதிய பாதுகாப்பு கிடைத்தபின்னரே அமைதிப்படை தாயகம் திரும்ப வேண்டும் என்றும் முதலமைச்சர் கேட்டுக்கொண்டார். (உ-எ-ஃ)

## அமைதிப்படை வாபஸ்; தெலுங்கு தேசம் வலியுறுத்து

இலங்கையிலிருந்து இந்திய அமைதிப்படை உடனடியாக வாபஸ் பெறவேண்டும்.

தெலுங்கு தேசம் கட்சி எம்.பிக்கள் இப்படிக் கோரியிருக்கிறார்கள்.

தெலுங்கு தேசம் கட்சி எம். பி.க்களின் கூட்டம் அண்மையில் ஆந்திர முதலமைச்சர் திரு. என். ரி. ராமராவ் தலைமையில் நடைபெற்றது.

இலங்கைப் பிரச்சினைபற்றி இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானத்தில் கூறப்பட்டிருப்பதாவது:-

இலங்கையில் தொடர்ந்து இந்திய அமைதிப்படை நிலை

(4 ஆ பக்கம் பார்க்க)

# மோசமான பொருளாதார நெருக்கடி இலங்கை எதிர்நோக்குகிறது!

## ஆசிய அபிவிருத்தி வங்கி எச்சரிக்கை

கொழும்பு, ஜுலை 19

மோசமான பொருளாதார நெருக்கடியை இலங்கை எதிர் நோக்குவதாக ஆசிய அபிவிருத்தி வங்கியும் எச்சரித்துள்ளது.

இலங்கையின் பொருளாதாரம்பற்றிய 1989 ஆம் ஆண்டிற்கான ஆய்வறிக்கையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிப்பு, வெளிநாட்டுக் கடன்கள் அதிகரிப்பு, அரசு கடன்களுக்கு கூடுதல் வட்டி வழங்குவது, உள்ளூர் சேமிப்புக்குறைவு— ஆகியவற்றால் நாடு நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது.

பெரிய முதலீடுகளுடன் ஆரம்பமான திட்டங்களில் இருந்து எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்கக் குறைவான பலனே கிடைத்துள்ளது.

1989இல் பத்துச்சத வீதமாக உள்ள பணவீக்கம் 1990இல் 7 சத வீதமாகக் குறையலாம்.

இலங்கையின் வெளிநாட்டுக்கடன் 1989இல் 510 கோடி டாலராகவும் 1990இல் 550 கோடிடாலராகவும், இருக்கப் போகிறது.

1987இல் 18 சத வீதமாக இருந்த வேலையில்லாத் திட்டம் 1988இல் 16 சத வீதமாகக் குறைந்தது.

தற்போதுள்ள அரசியல் நெருக்கடி காரணமாக பட்ஜட்டில் துண்டுவிழும்தொகையையும் வெளிநாட்டுக் கடன்களைத் திருப்பி செலுத்துவதையும் சமாளிக்க முடியாத கஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இப்படி ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-எ)

## வேலிகளுக்குத் தீ

யாழ்ப்பாணம் ஜுலை 19

நல்லூர், கல்வியங்காட்டுப் பகுதிகளில் நேற்றும் வேலிகளுக்குத் தீ வைக்கப்பட்டது. (உ-10)

சுபநேரம்
19—07—1989

ஆடி 05 — புதன்கிழமை
நக்ஷத்திரம்: உத்தராடம்
சுபநேரம்:
04.31 முதல் 06.01 வரை
ராகுகாலம்:
12.01 முதல் 01.31 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

## மணிலாவிலிருந்து 15 தமிழரை நாடு கடத்த நடவடிக்கை

மணிலா, ஜுலை 19

மணிலாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 15 இலங்கைத் தமிழரை நாடு கடத்தும் சட்ட நடவடிக்கைகளை பிலிப்பீன்ஸ் குடியகல்வுத் திணைக்களம் எடுக்கவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

பிலிப்பீன்ஸ் குடியகல்வு ஆணையாளர் இதுபற்றி தெரிவிக்கையில், ''இரண்டு விடுதிகளில் தங்கியிருந்த 29 இலங்கைத் தமிழரை கடந்த வியாழக்கிழமை கைது செய்து தடுத்து வைத்து உள்ளோம்.

''இவர்களில் 14 பேரிடம் சட்டபூர்வமான பயண தஸ்தாவேஜுகள் இருந்தன. எஞ்சிய 15 பேர்களிடம் சந்தேகத்துக்கு இடமான தஸ்தாவேஜுகளே இருந்தன'' — என்று சொன்னார்.

மொழிபெயர்ப்பாளரின் உதவியுடன் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழர்கள் வாக்குமூலமளித்தனர்.

இலங்கையில் இடம்பெறும் மோதலில் இருந்து தப்பவே மணிலா வந்ததாகவும் அமெரிக்கா அல்லது கனடாவுக்கு மாணவர் விஸா பெற்றுச்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாலையில் வேட்டுச் சத்தம்

யாழ்ப்பாணம், ஜுலை 19

யாழ்நகரை அண்டிய பகுதிகளில் பல இடங்களில் நேற்று அதிகாலை 4 மணியளவில் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டன. சேதம் ஏதும் ஏற்படவில்லை. (உ-10)

## உமாமகேஸ்வரன் கொலை; ஈ.பி.ஆர்.எல்.எவ். கண்டனம்

யாழ்ப்பாணம், ஜுலை 19

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத் தலைவர் திரு. உமா மகேஸ்வரன் கொலை செய்யப்பட்டதைக் கண்டித்து ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. க. பத்மநாபா அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.



அறிக்கை வருமாறு:-

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களான திரு. அ. அமிர்தலிங்கம், திரு வெ. யோகேஸ்வரன் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டு, அவர்களது இரத்தம் உறைவதற்கு முன்னரே, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவர் திரு உமா மகேஸ்வரன் கொழும்பில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். இச் செய்தி தமிழினத்தினதும், தமிழர் விடுதலை இயக்கங்களினதும், முன்னுள்ள பாரிய அச்சுறுத்தலை எடுத்துக்காட்டுகின்றது.

திரு. உமாமகேஸ்வரனின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தந்தங்கள் எரிப்பு!

நைரோபி, ஜுலை 19

கென்யா தலைநகரான நைரோபியின் தேசிய பூங்காவில் வைத்து 30 லட்சம் டாலர் மதிப்புள்ள ஆயிரக்கணக்கான யானைத் தந்தங்கள் நேற்றுத் தீக்கிரையாக்கப்பட்டன.

கென்யா ஜனாதிபதி திரு. மோய், முதலில் தந்தங்களுக்கு நெருப்பு வைத்தார்.

சட்ட விரோதமாக யானைகளைக் கொன்று தந்தங்களை வேட்டையாடுபவர்களிடம் இருந்து இத்தந்தங்கள் கைப்பற்றப்பட்டிருந்தன.

சுமார் 2 ஆயிரம் யானைகளைக் கொன்று எடுக்கப்பட்ட தந்தங்கள் இவை என்று

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## சின்னஞ் சிறு விளம்பரம்

### தேவை

நல்லநிலையில் உள்ள வாம் பெண்ணையில் இயங்கும் சிக்மா ரூபின் சென்ரிக்ஸ் வாட்டபம் தேவை. தொடர்பு தி. இராசரெத்தினம், தாவடி தெற்கு, கொக்குவில். (11566)

### மணமகன் தேவை

யாழ்ப்பாண இந்துவேளாள செவ்வாய்க் குற்றமுள்ள 26 வயது M.S.C மணப்பெண்ணுக்கு Doctor, Engineer, Accountant பட்டதாரி தேவை. வெளிநாட்டு மணமக்களும் விரும்பப்படுவர்: மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (11561)

### காணி விற்பனைக்கு

இருபாலைச் சந்தியில் பருத்தித்துறை வீதியில் கடை, வீடு கட்ட உகந்த 2½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: ப. கருணானந்தன் முருகன் இல்லம், பழைய வீதி, கோப்பாய். [சி/3060]

### காணி விற்பனை

நவாலியில் 17 பரப்புக்காணி வளவுடன், பருத்தித்துறையில் ஹாட்லிக் கல்லூரி மாணவர் விடுதிக்குச் சமீபமாக 3பரப்புக் காணியும், மந்திகையில் கந்த முருகேசனார் சிலை அருகில் 2 பரப்புத் தோட்டக் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- செ. கணேசராசா, சட்டத்தரணி தம்பசெட்டி பருத்தித்துறை அல்லது இல; 195, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (11550)

### கோழிக்குஞ்சு விநியோகம் (Uplands Farm)

(Dekalb) பிறவுண் பேடு பிறவுண் சேவல் (Cobb) புரொயிலர் குஞ்சுகள் (19-7-89) புதன்கிழமை குறைந்த விலைக்கு விநியோகிக்கப்படும். (சேவல் குஞ்சு 50க்கு மேல் எடுப்பவர்களுக்கு விலை. ரூ. 8/50) உடன் பதிவு செய்க. இல: 9, கந்தையா லேன், கன்னாகம். (புகையிரத நிலையத்திற்கு அண்மையில்.) (1091)

### Nallur Farm Centre

Nallur Farm Centre Prima Lohmann வெள்ளை, சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் Prima Broiler குஞ்சுகள் சிவப்பு சேவற்குஞ்சுகள் Golden Comet Hyline பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய், புதன் கிழமைகளில் பெற்றுக் கொள்ளலாம். C/o நல்லூர் வீடியோசென்ரர், 19 முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி-3006)

### Typewriter

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக்கொள்ளவும், தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் செய்து கொள்ளவும். நாடுங்கள்: Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி/3034)

### சேவை

நெல் குற்றுதல், மா, மிளகாய் அரைத்தல், தானிய வகைகள் உடைத்தல் மின்சாரம் தடைப்பட்டாலும் செய்து கொடுக்கப்படும். K.S.R.K Grinding Mill 3ம் கட்டையடி, கல்வியங்காடு. (11567)

## நெடுந்தீவு வீதியின் அவலநிலை

ஏழு மைல்கள் தூரம் கொண்ட நெடுந்தீவின் பிரதானவீதி படுமோசமான நிலையில் உள்ளது. இதனால் சேவையில் உள்ள ஒரேயொரு பஸ்ஸும் அடிக்கடி பழுதடைகின்றது.

இந்த வீதியைப் புனரமைக்கும் நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு நெடுந்தீவு பிரதேசசபையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் திரு. எஸ். சோதிலிங்கம் உதவி உள்ளூராட்சி ஆணையாளருடன் தொடர்பு கொண்டுள்ளார். (இ-111)

# சயரோகத்தால் பாதிக்கப்பட்டோருக்கு 2 தடவை சம்பளத்துடன் 4 மாத லீவு

கொழும்பு, ஜூலை 19

சயரோகத்தால் பீடிக்கப்பட்ட அரச சேவையாளர்களுக்கு சம்பளத்துடன் நான்கு மாத லீவு இருதடவை வழங்க அரசு முடிவு செய்துள்ளது:

சிலவகை நோய்களால் பீடிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு விசேஷ சலுகைகள், நிபந்தனைகள் ஆகியன வழங்குவது சம்பந்தமான தாபன விதிக் கோவை அத்தியாயம் 12 இல் 1:1 ஆம் உபபிரிவில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் பிரகாரமே அரச ஊழியர்களுக்கு இச்சலுகை வழங்கப்பட இருக்கிறது.

இத்திருத்தத்தின்படி, சயரோகத்தால் பீடிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு முதலில் நான்கு மாத சம்பளத்துடன் லீவும், பின்பு இரண்டு வருட சேவை செய்த பின்பு நான்கு மாதம் சம்பளத்துடன் லீவு வழங்கப்படவிருக்கிறது. (இ-7)

## நாடு திரும்பும் அகதிகளுக்கு புனர்வாழ்வளிக்க நிதி

லண்டன், ஜூலை 18

இலங்கை திரும்பும் அகதிகளின் புனர்வாழ்வுப் பணிகளுக்குபிரிட்டிஷ்அரசு மேலும் நிதி ஒதுக்கியிருக்கிறது.

இதை லண்டனில் உள்ள வெளிநாட்டு அபிவிருத்தி நிர்வாக அமைப்பு அறிவித்திருக்கிறது.

ஐ. நா. அகதிகள் தூதராலயத்திற்கு ஒருலட்சம்பவுண்ட் இத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

இந்த ஆண்டு ஆரம்பத்தில் பிரிட்டிஷ் அரசு இரண்டரை லட்சம்பவுண்ட் உதவி வழங்கியது.

1988இல் பிரிட்டிஷ் அரசு 2 லட்சம் பவுண்டுகளை வழங்கியது. (உ-எ)

## இடமாற்றத்தைப் பெற்ற 268 ஆசிரியர்கள் நிலைமை

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ். மாவட்டத்துக்கு வெளியே கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றி யாழ் மாவட்டத்துக்குப் புதிதாக நியமனம் பெற்ற 268 ஆசிரியர்களும் திரிசங்கு நிலையில் உள்ளனர்,

268 ஆசிரியர்களும் கடந்த 10 ஆம் திகதி முதல் யாழ் மாவட்டத்துக்கு நியமனம் செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இவர்களின் நியமனப் பட்டியல் இதுவரை யாழ் கல்வித் திணைக்களத்துக்கு வந்து சேரவில்லை.

இது பற்றி யாழ்-கல்வித் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு விசாரித்த போது, 'தமக்கு நியமனப் பட்டியல் இன்னும் கிடைக்கவில்லை' என்றும் கிடைத்த பின்பு பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு கடிதம் வழங்கப்படும் என்றும் அவர்கள் அந்தப் பாடசாலையில் பொறுப்பேற்ற பின்புதான் அவர்களின் சம்பளம் உட்பட சகல வேலைகளையும் நாம் மேற்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதனால் இந்த ஆசிரியர்கள் இம்மாதச் சம்பளத்தை முன்னைய பாடசாலையிலேயே பெறவேண்டிய நிலையில் உள்ளனர். (இ-3)

### சுவரொட்டிப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் பத்தாவது நிறைவைக் குறிக்கும் முகமாக கண்காட்சியுடன் ஓர் 'சுவரொட்டிப் போட்டியும் நடைபெறவுள்ளன.

போட்டியில் கலந்து கொள்பவர்கள் ஒன்றுக்கு மேற்பட்டசுவரொட்டிகளை அனுப்பி வைக்கலாம்

சுவரொட்டிக்குரிய கருப்பொருள்கள் புகைத்தல், போதைப் பொருள் பாவனை' வறுமை தாய்மை விபத்துகள் இரத்ததானம் ஆகியனவாகும்.

சுவரொட்டிகளை அனுப்புவதற்கான கடைசி நாள் 30-8-1989 மேலதிக விபரங்களை சுவரொட்டி போட்டிக் குழு, யாழ் பல்கலைக்கழகம், மருத்துவபீடம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)


உடனடி

**வேலைவாய்ப்பு**

**T. V. TRAVELS**

● கனடா ● அமெரிக்கா ● அவுஸ்திரேலியா

நாட்டிற்குச் செல்வோருக்கு விசா, ரிக்கற் செய்து தரப்படும்.

★ குறுகிய நேரத்தில் செய்து தரப்படும்

மற்றும்

● ஜேர்மன்

செல்வோருக்கு உடன் ஒழுங்கு செய்து தரப்படும்.

● சவூதி அரேபியா

Cleaners 450 SR

★ ஒரு மாதத்தில் பயணம் செய்யலாம்.

● KUWAIT நாட்டிற்கு

House Maid பெண்கள் (கிளீனர்) 30 KD

மற்றும்

சவூதி, குவைத், சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கும் பிரயாணம் செய்யலாம்.

**T. V. TRAVELS**

Brown Road,
KOKUVIL.

(11566)



## குழாய் கிணறுகள்

TUBE WELLS

பாரிய நவீன இயந்திரங்களின் மூலம் குழாய்க் கிணறுகள், ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்படும்.

விவசாயிகள் குடிநீர் தேவையானவர்கள் உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**ரியூப் வெல் என்ஜினியேர்ஸ்,**
**648½, ஆஸ்பத்திரிவீதி.**
**யாழ்ப்பாணம்.**

**ரியூப் வெல் என்ஜினியேர்ஸ்,**
**208. ஸ்ரேசன் வீதி,**
**வவுனியா.**

(1217)


## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்வன் நா. மோகனராசா**

(கொழும்பான்)

அன்னையின் மடியில்:- **26-07-1964**    ஆண்டவன் அடியில்:- **12-08-1984**

எண்ணத்தில் நாம் வரைந்த
ஓவியமே மோகனராஜ்!
ஐந்தாண்டு கடந்ததையே
நாம் பெற்ற செல்வமே ஐயா!
உருகி மனம் வெடிக்கின்றோம்
ஆறுதல் சொல்லுமையா எமக்கு

உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்
பெற்றோர், சகோதர சகோதரிகள்,
மருமக்கள், பெருமகன்.

ஊரெழு கிழக்கு.
சுன்னாகம்.

(1220)

## நினைவு கூருதலும் நன்றி செலுத்துதலும்



**திருமதி கிரேஸ் நேசம்மா செல்வத்துரை**

**மண்ணில்: 21-3-1915    விண்ணில்: 19-7-1988**

''நீர் உமது விலையுயர்ந்த இரத்தத்தால்
மீட்டுக்கொண்ட உமது அடியாருக்குச்
சகாயம் செய்யும்''

''தேவி வில்லா''
பண்டத்தரிப்பு.

கணவர், பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

(1215)

## புங்குடுதீவு கடற்றொழிலாளர் நிவாரண நிதிஇன்றி அவதி

யாழ்ப்பாணம், ஜூலை 19

புங்குடுதீவு கடற்றொழிலாளர்களுக்கு புனர்வாழ்வு அமைச்சால் வழங்கப்படும் நிவாரணநிதி இன்னும் வழங்கப்படாததை ஒட்டி புங்குடுதீவு புனித பிரான்சிஸ் சவேரியார் சனசமூகநிலையத் தலைவர் யாழ். அரசாங்க அதிபருக்கும் வேலணை உதவி அரசாங்க அதிபருக்கும் மகஜர் ஒன்றைஅனுப்பியுள்ளார்

இந்த ஏழை மீன்பிடித் தொழிலாளர்களுக்கு விரைவில் நிவாரணத்தை வழங்க நடவடிக்கை எடுக்கும்படி மகஜரில் கோரப்பட்டுள்ளது. (க[


## பதவி வெற்றிடங்கள்

### விற்பனைப் பிரதிநிதிகள்

சுறுசுறுப்பும் இளம் வயதுடைய விற்பனைப் பிரதிநிதிகள் எமக்குத் தேவைப்படுகின்றனர்.

ஆகக் குறைந்த மேற்பார்வையுடன் குறிக்கப்பட்ட இலக்கு விற்பனையைத் தரக்கூடிய நிபந்தனை அடிப்படையில் யாழ்ப்பாணம் குடாநாடு மற்றும் கிழக்கு மாகாணத்தில் வேலை செய்யக்கூடியவர்களாக இவர்கள் இருக்க வேண்டும்.

**விண்ணப்பிப்பவர்கள், 30 வயதுக்கு உட்பட்டவர்களாகவும்,**

பிரபல நிறுவனம் ஒன்றில் குறைந்தது மூன்று வருடங்கள் விற்பனைத்துறையில் அனுபவம் பெற்றவர்களாகவும்,

ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தியும், ஜி. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சையில் கணிதத்திலும், ஆங்கிலத்திலும் திறமைச் சித்தியும் பெற்றவர்களாகவும் இருக்கவேண்டும்.

எமது உற்பத்திகளின் விற்பனையை அதிகரிக்கக் கூடிய, பாவனையாளர் விற்பனையாளர் இடையே நல்ல உறவை நிலை நாட்டுபவர்களாக தலைமை அலுவலகத்துக்கும் வேலை செய்யும் இடத்துக்கும் இடையே ஓடியாடிப் பணிபுரியக்கூடியவர்களாக இருக்கக்கூடியவர்களையே நாம் எதிர்பார்க்கிறோம்.

இத்தகுதிகளை நீங்கள் பெற்றிருப்பீர்களானால் உங்களுடைய முழுவிபரங்களுடன். உங்களுடைய உறவினரல்லாத இரண்டு நடுவர்களின் சிபாரிசுடன் கீழ்வரும் விலாசத்துக்கு விண்ணப்பங்களை அனுப்பி வையுங்கள்:

**சிரேஷ்ட சந்தைப்படுத்தும் முகாமையாளர்**
**யுனிவேர்சல் மார்க்கெட்டிங் சேர்விஸஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,**
**65, கிருள்ள வீதி, கொழும்பு-5**



## நாஷனல் சிப்பிங் அன்ட் ரவல்ஸ்

பதினெட்டு வயதுக்கு மேற்பட்டோர்

★ ஜேர்மனி ★ இத்தாலி
★ பிரான்ஸ் ★ சுவிஸ்

ஆகிய இடங்களுக்குச் செல்வதற்கு
வாரம் ஒரு பயண ஏற்பாடு


விபரங்களுக்கு:

**NATIONAL SHIPPING AND TRAVEL**

New Lalitha Building.
185/2, Kasthuriar Road,
**JAFFNA.**

(C/2964)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**A. S. அரசரட்ணம்**

மலர்வு: 1909-04-26    உதிர்வு: 1987-07 19

அன்புத் தந்தையே! நீங்கள் எம்மை விட்டு மறைந்தாலும், உங்கள் நினைவுகள் எம்மை விட்டு மறையவில்லை! உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனிடம் பிரார்த்திக்கும்.

39, மடம் வீதி,
யாழ்ப்பாணம்:

மகள், மகன்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.
(11568)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் அதி உயரமான

# சியாச்சென் யுத்தகளம் பற்றிய இந்திய-பாக் பேச்சுக்கள் ஆகஸ்டில்!

## ராஜீவ் - பெனாஸிர் கூட்டறிக்கையில் தகவல்

இஸ்லாமபாத், ஜூலை 18

எல்லைப்புறத்தில் உள்ள சியாச்சென் பனிப்பிரதேசத் தகராறு சம்பந்தமான பேச்சுக்களை துரிதப்படுத்துவது என்று இந்தியாவும் பாகிஸ்தானும் உடன்பட்டுள்ளன.

வார இறுதியில் நடந்த பேச்சுக்களின் முடிவில் ராஜீவ் - பெனாஸிர் வெளியிட்ட கூட்டறிக்கையில் இத்தகவல் வெளியிட்டுள்ளது.

இந்திய - பாகிஸ்தான் எல்லைப்புறத்தில் சியாச்சென் பனிப்பிரதேசம் அமைந்துள்ளது.

கடல் மட்டத்தில் இருந்து 8 ஆயிரம் மீற்றர் உயரத்தில் இப்பனிப்பிரதேசம் உள்ளது:

உலகில் அதி உயரத்தில் உள்ள யுத்தகளமாக இது கருதப்படுகிறது.

இப்பகுதியில் இந்திய - பாகிஸ்தான் துருப்புக்கள் நேருக்கு நேர் நிறுத்தப்பட்டுள்ளன.

இடைக்கிடை இரு படைகளும் இப்பகுதியில் மோதலில் ஈடுபட்டு வருகின்றன.

இப்பதற்றத்தைத் தணிக்கும் பேச்சுக்களை விரைவாக நடத்துவது என்று இப்போது ராஜீவ் காந்தியும் பெனாஸிரும் தீர்மானித்துள்ளனர்.

இரு நாடுகளின் இராணுவத் தளபதிகளும் அடுத்த மாதம் முதல்வாரத்தில் கூடிப் பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

இது சம்பந்தமான பணிப்புரைகளை தாங்கள் தங்கள் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர்களுக்கு இரு பிரதமர்களும் விடுத்துள்ளனர்.

இப்பிரதேசத்தில் இருந்து கட்டம் கட்டமாகத் துருப்புக்களை விலக்கிக் கொள்வது பற்றி இப்பேச்சுக்களின்போது தீர்மானிக்கப்படும் என்று தெரியவருகிறது. (எ)

## பத்து லட்சம் பவுண் பணத்துடன் பாதுகாப்பு அதிகாரி மறைவு

லண்டன் ஜூலை 18

பத்துலட்சம் பவுண் பணத்துடன் காணமற் போன பாதுகாப்பு அதிகாரி ஒருவரை லண்டன் பொலீஸார் தேடி வருகின்றனர்.

அவர் நாட்டை விட்டு வெளியேறாமல் பார்த்துக் கொள்ளும் படி பிரிட்டனில் உள்ள சகல விமான நிலையங்களும் உஷார் படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த நபர் கடந்த வெள்ளிக்கிழமை போர்த்துக்கீச விமான நிறுவனத்தில் இருந்து இப் பணத்தைச் சேகரித்துக் கொண்டு ஒரு வானில் புறப்பட்டார். பின்னர் அந்த வான் அனாதரவான நிலையில் வீதி ஓரத்தில் கிடக்கக்கண்டு பிடிக்கப்பட்டது

வானில் 5ஆயிரம் பவுண் பணம் இருந்து கைப்பற்றப் பட்டது.

பாதுகாப்பு அதிகாரி கடத்தப்பட்டிருக்கலாம் என்ற சாத்தியத்தையும் பொலீஸார் நிராகரிக்கவில்லை (எ)

## எதிர்க்கட்சிகளுடன் பேச்சு; நிக்கரகுவா அரசு அறிவிப்பு

தேர்தல் சீர்திருத்தம் பற்றி எதிர்க்கட்சிகளுடன் பேச்சுக்கள் நடத்தப்போவதாக நிக்கரகுவா அரசு அறிவித்திருக்கிறது.

இது சம்பந்தமான அழைப்பை ஜனாதிபதி ஜெனரல் ஒற்றேகா எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு அறிவித்திருக்கிறார்.

கொன்ரா கிளர்ச்சியாளர்களின் ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சியின் முக்கிய கட்டமாக இது கருதப்படுகிறது. [எ]

## மோசடி கல்விநிறுவனங்கள் தமிழகத்தில்என எச்சரிக்கை!

சென்னை, ஜூலை 18

தமிழ் நாட்டில் போலி தொழில்நுட்பக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் இயங்குவதாக தமிழக அரசு எச்சரிக்கை செய்துள்ளது.

அரசு விடுத்திருக்கும் பத்திரிகைக் குறிப்பு ஒன்றில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சொந்த நிதியில் இயங்குவதாகக் கூறிக்கொள்ளும் தொழில்நுட்பக் கல்லூரிகள் பொறியியல் கல்லூரிகள் பற்றி அரசுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

படிப்புக்குத் தேவையான வசதிகளும் தகுதியான ஆசிரியர்களும் இந்நிறுவனங்களில் இல்லை என்றும் புகார் செய்யப்பட்டுள்ளது.

ஆகவே இப்போலி நிறுவனங்கள் குறித்து கவனமாக இருக்குமாறு மாணவர்களையும் பெற்றோர்களையும் அரசு எச்சரிக்கிறது.

இப்படிச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## தமிழ் நடிகை தீபா பிரச்சினை; சென்னை நீதிமன்றம் தீர்ப்பு!

சென்னை, ஜூலை 18

நடிகை தீபா சம்பந்தமாக அவரது தாயார் திருமதி விக்டோரியா அகஸ்டின் பெர்னாண்டஸ் தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனுவை சென்னை மேல் நீதிமன்றம் விசாரணையின் பின்னர் தள்ளுபடி செய்தது.

நீதியரசர்கள் எஸ் சிவசுப்பிரமணியம், ரி. எஸ். அருணசலம் ஆகியோர் மனுவை விசாரித்தனர்.

மனுவில் அவரது தாயார் கூறியிருந்ததாவது;

தீபா ஒரு மனநோயாளி. அதைப் பயன்படுத்தி கே. பி. ராஜா என்பவர் அவரை சட்ட விரோதமாக ஒரு வீட்டில் தடுத்து வைத்து இருக்கிறார். அத்துடன் தீபாவை சட்டவிரோதச் செயல்களுக்கும் பயன்படுத்தி வருகிறார். குடும்ப உறவினர்கள் தீபாவை சந்திக்க முடியாமல் இருக்கிறது.

ஆகவே தீபாவை நீதிமன்றத்தில் ஆஜர் செய்து, அவரின் சுதந்திரத்தை உறுதிப் படுத்த வேண்டும்.

இம்மனுவில் இவ்வாறு கோரப்பட்டிருந்தது.

கே. பி. ராஜா தனது பதிலில்—

தீபா நற்பணி மன்றம் மூலமாக அவரது தொடர்பு எனக்குக் கிடைத்தது. தீபா எனது பொறுப்பில் இல்லை; அவர் தனது மகனுடன் தனியே வசித்து வருகிறார். தீபா இப்போது படங்களில் நடிப்பது இல்லை. அதனாலும் அவரது சொத்துக்களை அபகரிக்கவுமே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது'— என்று தெரிவிக்கப் பட்டிருந்தது.

விசாரணையின் போது, தீபாவை நீதிமன்றத்துக்கு கொண்டு வருமாறு நீதியரசர்கள் ராஜாவுக்கு உத்தரவிட்டனர்.

நீதியரசர்கள் பின்னர் தங்களது அறையில் தீபாவை விசாரித்தனர். பின்னர் தீர்ப்பு வழங்கினர்.

"நாம் தீபாவை விசாரித்தோம். அவர் மனநோயாளி அல்லர் என்று அறிந்து கொண்டோம். அவர் தான் நினைத்தபடி நடப்பவர். ஆகவே அவரை இன்னொருவர் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்து இருக்கக் கூடிய வாய்ப்பே இல்லை.

"பெற்றோர்களுடன் செல்லும் படி உத்தரவிட்டால் தீபா தற்கொலை செய்து கொள்ளக் கூடிய ஆபத்தும் உண்டு. அரசியலில் தீபா தீவிரம் காட்டி வருகிறார்." —

இப்படி நீதியரசர்கள் கூறி ஆட்கொணர்வு மனுவைத் தள்ளுபடி செய்தனர். (எ)

## இலங்கை-இந்திய தகாறு குறித்து பெனாஸிர் கவலை

இஸ்லாமபாத், ஜூலை 18

மோசமடைந்து வரும் இந்திய - இலங்கை உறவு குறித்து பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோ கவலை தெரிவித்தார்.

இந்தியப் பிரதமருடன் சேர்ந்து நடத்திய செய்தியாளர் மாநாட்டில் பேசிய பிரதமர் பெனாஸிர்,

இலங்கையுடனான பிரச்சினை குறித்து இந்தியா சொந்தக் கொள்கையைக் கொண்டிருக்கலாம்.

ஆனால் இத்தகராறு இப்பிராந்திய வளர்ச்சிக்கு உதவாது என்றார்.

## சோவியத்தில் வேலை நிறுத்தம்

சோவியத் யூனியனில் சுமார் ஒரு லட்சம் நிலக்கரித் தொழிலாளர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சைபீரியா உக்ரேயின் ஆகிய இடங்களில் உள்ள நிலக்கரிச் சுரங்கங்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன.

நாட்டின் நிலக்கரித் தேவையை இந்த இரண்டு சுரங்கங்களும் பூர்த்தி செய்கின்றன. (எ)

## பனாமா நெருக்கடி

பனாமா ஜூலை 18

பனாமா அரசியல் நெருக்கடிக்குத் தீர்வுகாண எதிர்க்கட்சிகள் இராணுவ ஆட்சியாளருடன் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளன என்று அறிவிக்கப்படுகின்றது. (எ)

## மாநாடு முடிவு

பாரிஸ், ஜூலை 18

ஏழு செல்வந்த கம்யூனிஸ்ட் அல்லாத நாடுகளின் உச்சி மாநாடு பாரிஸில் நேற்று முடிவடைந்தது.

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு, ஓஸோன் வளிமண்டலம் பாதுகாப்பு, அணுக் கழிவுகளைக் கொட்டுவது ஆகியன பற்றி மாநாட்டில் உடன்பாடு காணப்பட்டது.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, யப்பான், கனடா, மேற்கு ஜேர்மனி ஆகிய நாடுகளின் தலைவர்கள் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர் (எ)

## மோடி கொலை வழக்கு ஷெசன்ஸ் விசாரணை

லக்னோ, ஜூலை 18

பாட்மின்டன் சாம்பியன் செய்யத் மோடி கொலைவழக்கு செஷன்ஸ் நீதிமன்ற விசாரணைக்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

விசேட நீதிவான், பூர்வாங்க விசாரணையை முடித்துக் கொண்டு இத்தீர்ப்பை வழங்கினார்.

கொல்லப்பட்ட பாட்மின்டன் வீரரின் மனைவி அமிதா மோடி, ஜனதாதள் தலைவர் சஞ்சய் சிங் உட்பட ஏழுபேர் மீது கொலைக்குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

செஷன்ஸ் விசாரணை அடுத்தமாதம் 7 ஆம் திகதி ஆரம்பமாகும். (எ)

## நிவாரணப்பணம்

கோப்பாய், ஜூலை 19

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வறுமை நிவாரணப் பணமாக ஒரு லட்சத்து முப்பதினாயிரம் ரூபா வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களுக்கு வழங்கப் பட்டு வந்தது:

ஆனால் சமூகசேவைத் திணைக்களத்தினால் ஒருலட்சம் ரூபா மாத்ரமே வழங்கப்பட்டுள்ளதனால் இதனைப் பங்கிட்டு வழங்குவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது:

இதனால் வறுமை நிவாரணப் பணத்தை புதிதாக எவரும் பெற முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. (ச - 72)

## வரியிறுப்பாளர் கோரிக்கை

ஊர்காவற்றுறை பட்டின சபை எல்லைக்குள் சீராக மின் சேவையை வழங்குமாறு இங்குள்ள மின் பாவனையாளர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஊர்காவற்றுறை பட்டின வரியிறுப்பாளர்களின் பிரதிநிதிகள் குழுவொன்று அண்மையில் ஊர்காவற்றுறை பிரதேச சபையின் விசேட ஆணையாளர், நிர்வாக உத்தியோகத்தர், மின்சாரபொறுப்பதிகாரிஆகியோரைச்சந்தித்து இப்பகுதி வரியிறுப்பாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி எடுத்துக் கூறியது.

மின்சாரம், சுகாதாரம், குடிதண்ணீர் ஆகிய விடயங்கள் தொடர்பாக இங்கு கலந்துரையாடல் இடம் பெற்றது. (ச - 16)

## டிப்ளோமாப் பயிற்சி பெற தற்காலிக இடமாற்றம்

அச்சுவேலி, ஜூலை 19

வடக்கு - கிழக்கு மாவட்டங்களில் இருந்து யாழ். பல்கலைக்கழக பட்டப் பின் கல்வி டிப்ளோமா பாட நெறிக்கு தெரிவு செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் யாழ். மாவட்டத்தில் தற்காலிக இடமாற்றம் பெற்றுள்ளனர்.

யாழ். பல்கலைக் கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பகுதிநேர பாடநெறி பயிலும் பட்டதாரி ஆசிரியைகள் பல்கலை கழகத்தில் இருந்து 25 மைல் தூரத்துக்குள் சேவையாற்ற வேண்டும் என்பது அடிப்படை நிபந்தனைகளில் ஒன்றாகும்.

இந்த நிபந்தனையின் படி யாழ். மாவட்டத்துக்கு இடமாற்றம் கிடைக்காததால் சில ஆசிரியர்கள் டிப்ளோமாபாட நெறிக்கு தெரிவு செய்யப்பட்டும் நெறியை தொடர முடியாமல் கைவிட்டனர்.

இந்த நிலையை கருத்தில் கொண்டு வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சு யாழ் பல்கலைக்கழக பட்டப் பின் கல்வி டிப்ளோமா பாட நெறிக்கு தெரிவு செய்யப்படும் வடக்கு கிழக்கு மாட்டங்களில் கடமை புரியும் ஆசிரியர்களுக்கு யாழ். மாவட்டத்துக்கு தற்காலிக இடமாற்றம் வழங்குவதற்கு தீர்மானித்திருந்தது.

இந்தத் தீர்மானத்தின் படி இந்த் வருஷம் யாழ் பல்கலைக் கழகத்துக்கு பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாட நெறிக்கு தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு வசதியான பாடசாலைகளில் கடமை புரியக் கூடிய முறையில் தற்காலிக இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. (க-11)

## பேராசிரியர் செல்வநாயகம் நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம், ஜூலை 19

பேராசிரியர் சோ. செல்வநாயகம் நினைவுப் பேருரை இன்று புதன் மாலை 3 மணிக்கு கைலாசபதி கலையரங்கத்தில் யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமையில் நடைபெறும்.

கலைப் பீடாதிபதி பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் மங்கள விளக்கேற்றி ஆரம்ப உரை நிகழ்த்துவார்; திருமதி தயாநிதி செல்வநாயகம் படத்துக்கு மாலை அணிவிப்பார். பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அறிமுக வுரை நிகழ்த்துவார்.

"சங்ககால நகரங்களின் அழிவும் கடல் கோள்களின் நிகழ்வும்" என்ற தலைப்பிலான நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. செ. பாலச்சந்திரன் நிகழ்த்துவார். (க)

## சித்திரத்தேரும் திருவிழாவும்

பச்சிலைப்பள்ளி, ஜூலை 19

சாவகச்சேரி துர்க்கை அம்மன் ஆலயத்தின் புதிய சித்திரத் தேரின் வெள்ளோட்டம் ஜூலை 28 ஆம் திகதி நடைபெறும்.

மேற்படி ஆலய வருடாந்தத் திருவிழா ஜூலை 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். தேர்த்திருவிழா ஜூலை 31 ஆம் திகதியும் தீர்த்தத் திருவிழா ஆகஸ்ட் 1 ஆம் திகதியும் நடைபெறும்.

★ 25 ஆயிரம்

# பயிலுநர் ஆசிரியர்கள் பதவிக்கு உணவு முத்திரை விசேட தகைமை

யாழ்ப்பாணம், ஜூலை 19

உதவி அரசாங்க அதிபர் மட்டத்தில் நியமிக்கப்படவிருக்கும் 25 ஆயிரம் பயிலுநர் ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பிப்போர் உணவு முத்திரை வைத்திருந்தால் விசேஷ தகைமையாக கணிக்கப்படும்.

நாடெங்கிலும் 25 ஆயிரம் பயிலுநர் ஆசிரியர்கள் நியமிக்க விண்ணப்பங்கள் வர்த்தமானி மூலம் கோரப்பட்டுள்ளன என்பது தெரிந்ததே.

அவ் வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ள மற்றும் முக்கிய விடயங்கள் வருமாறு:

★ உதவி அரசாங்க அதிபர் மட்டத்தில் நியமனம் வழங்கப்படும்.

★ மாவட்ட ஆசிரியர் சேவைத் திட்டத்தின் கீழ் பயிலுநர் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர்.

★ நியமனம் பெறும் பாடசாலையைவிட்டு வேறு பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்படமாட்டார்கள்.

★ 4 வருட சேவையின் பின் அவ்வப்போது கல்விப் பகுதியினரால் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்தியடைவோர் அப்பாடசாலையில் நிரந்தரமாக நியமிக்கப்படுவார்கள்.

★ சகல அலவன்ஸ் உட்பட மாதம் ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

★ 18 வயதுக்கு கீழ்படாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.

★ ஜீ. சி. ஈ உயர்தரப் பரீட்சையில் ஏதாவது மூன்று பாடங்களில் சித்தி அடைந்திருக்க வேண்டும்.

★ உதவி அரசாங்க பிரிவில் நிரந்தரமாக இருக்க வேண்டும், கிராமசேவையாளர் மட்டத்தில் இப் பதவிக்கு ஆள் இல்லையானால் அந்த உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள வேறொரு கிராம சேவையாளர் பிரிவில் இருந்து ஆள் தெரிவு இடம் பெறும்.

★ கிராமப்புறப் பாடசாலைகளில் அந்த அந்த பிரதேசத்துக்கு தக்க துறையில் ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

★ சமயம், விளையாட்டு, மொழி, கவின்கலைத்துறைகளில் சிறப்புச் சான்றிதழ் பெற்றவர்களுக்கு விசேஷ புள்ளி வழங்கப்படும்.

★ உணவு முத்திரை வைத்திருப்போருக்கும் விசேஷ புள்ளி வழங்கப்படும்.

★ தொண்டர் ஆசிரியர்களுக்கும் விசேஷ புள்ளி வழங்கப்படும்.

4 வருட சேவையின் பின் நிரந்தரமாக்கப்படுவார்கள்.

★ ஆகஸ்ட் மாதம் எட்டாம் திகதி முடிவு திகதியாகும்.

★ கல்வித் திணைக்களக் குழுவே நேர்முகப் பரீட்சையும் சிறுபரீட்சையையும் நடத்தும்.

அந்த அந்த உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்களிலும், மாவட்ட கல்விப் பணிப்பாளர் அலுவலகங்களிலும் பாடசாலைக்கு தேவையான ஆசிரியர்கள் விவரம் வைக்கப்பட்டுள்ளது என்றும் வர்த்தமானியில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ - 3)


## வெளிநாட்டு ★ வேலைவாய்ப்புகள் ★

● ஹொங்கொங்

1. பெயின்டேர்ஸ்
2. எலக்ரீசியன்ஸ்
3. காபென்ரேர்ஸ்
4. ட்றைவேர்ஸ்
5. பிளம்பர்
6. லேபரேர்ஸ்
7. கம்பி வளைப்பவர்
8. மெக்கானிக்ஸ்

● அபுதாபி

1. எலக்ரீசியன்ஸ்
2. ட்றைவேர்ஸ்
3. ஹவுஸ் போய்ஸ்
4. கிளீனேர்ஸ்

✶ 10 நாட்களிற்குள் பயணம் மேற்கொள்ளலாம்:
(முற்பணம் அறவிடப்படமாட்டாது)


★ மேலதிக விபரங்களுக்கு ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் 8.30 — 2.30 வரை தொடர்பு கொள்ளலாம்.

**மியூனிஸ்ட் என்ரபிறைசஸ்,**
156, 1 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
(வேம்படி மகளிர் கல்லூரி முன்பாக)
(சி- 3046)

✶ அதி உயர்ந்த தரத்திற்கும் ✶
உத்தரவாதத்திற்கும்
வாங்குங்கள்



**சிக்மா பம்ப்ஸ்**
**CEYGMA PUMPS**



மின் மோட்டர்கள் (ELECTRIC MOTOR PUMPS)
நீர் இறைக்கும் இயந்திரங்கள் (ENGINE DRIVEN PUMPS)

ஒரு வருட உத்தரவாதத்துடன்
விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

உங்கள் சகல நீர் இறைக்கும் தேவைகளையும்
பூர்த்தி செய்யத் தொடர்பு கொள்ளுங்கள்

**UNITED AGRO ENGINEERING**
274/1, ஆஸ்பத்திரி வீதி,
(பெரியாஸ்பத்திரி முன்பாக)
யாழ்ப்பாணம்.

தொழிற்சாலை:
நாவற்குழி, கைதடி.
(C/3054)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதிகள்
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள்
போட்டோ அல்பங்கள் இலவசம்
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்

19 · 07 · 1989 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
★ தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
நெக்கட்டிவ் [Processing] செய்தல் இலவசம்
★ விற்பனை வர்ண நிழற்படச் சுருள்கள்
Kodak Fuji Konic.
Tudor Fort B/W
பெற்றுக் கொள்ள நாடுங்கள்.

● முன்னரே கொழும்பு திரும்பியிருந்தால்

# ஜனாதிபதியின் கடித வாசகத்தை தான் மாற்றச் செய்திருப்பாராம்

## தொண்டா கூறுகிறார்

கொழும்பு, ஜுலை 19

இந்திய பிரதமர் ராஜீவ் காந்திக்கு அவரது தூதர் தேஷ்முக் மூலம் ஜனாதிபதி பிரேமதாஸா அனுப்பிவைத்த கடிதம் நான் கொழும்பு திரும்புவதற்கு முன்னர் அனுப்பி வைக்கபபட்டது துரதிஷ்டவசமானது.

நான் கொழும்பு திரும்பிய பின்னர் அக்கடிதம் அனுப்பப்பட்டிருப்பின் அக்கடிதத்தின் வாசகமே வேறாக இருந்திருக்கும்.

இப்படி அமைச்சர் திரு. தொண்டமான் கூறியிருந்தார்.

ஜனாதிபதி பிரேமதாஸாவை திரு. தொண்டமான் கடந்த திங்கட்கிழமை சந்தித்து இரண்டு மணித்தியாலங்கள்வரை பேச்சுக்கள் நடத்தினர்.

அதன் பின்னர் திரு. தொண்டமான் சொன்னதாவது:-

அமைதிப்படை விலகல் பற்றிய தற்போதைய நெருக்கடி தீர்க்கப்படும் என்று நம்புகிறேன்.

இரண்டு தலைவர்களின் மனதை அறிந்தவன் நான். இருவரும் மோதலை விரும்பவில்லை என்பதை நான் சொல்லமுடியும்.

அமைதிப்படை விலகவேண்டும் என்பதை இரு தலைவர்களும் ஏற்றுக்கொள்கிறார்கள். அதை அடையும் வழி அணுகுமுறை குறித்துத்தான் கருத்து வேற்றுமை நிலவுகிறது.

கருத்துவேறுபாடுகள் அனைத்துக்கும் ஜுலை 29க்கு முன்னர் தீர்வு கண்டாகவேண்டும். அது நடக்கும் என்று நம்புகின்றேன்.

இரு நாடுகளுக்கும் இடையில் மோதல் ஒன்று ஏற்படின் தோட்டப்பகுதித் தமிழர் தான் பாதிக்கப்படுவர் இந்தியாவும் இலங்கையும் இதனைப் பற்றி உணரவில்லை

ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன் வைத்திருந்தது மாதிரியான ஆக்கபூர்வமான நடைமுறையையே பிரேமதாஸாவுடனும் வைத்துக்கொள்ள விரும்புவதாக பிரதமர் காந்தி என்னிடம் சொன்னார்.

திரு. காந்தியுடன் நல்ல உறவை வைத்துக்கொள்ளவே ஜனாதிபதி பிரேமதாஸாவும் விரும்புகிறார் என்றார். (உ-எ)

## 'சோ' மீது நடந்த தாக்குதல் தொடர்பாக 4பேர் கைது!

மதுரை, ஜுலை 18

மதுரையில் கடந்த வியாழன் நடிகர் சோ பேசிய பொதுக் கூட்டத்தில் அசிட் திராவகம் வீசிய சம்பவம் தொடர்பாக பொலீஸார் நான்கு பேரைக் கைது செய்தனர்.

தமிழ்நாடு ஜனதா கட்சி சார்பில் நெல்லை ஜெபமணியின் பாதயாத்திரை விளக்கப் பொதுக் கூட்டம் மதுரை மேலமாசி-வடக்கு மாசி வீதிச் சந்திப்பில் நடந்தது.

கூட்டத்தில் நடிகர் சோ பேசிக் கொண்டிருந்தபோது மேடையை நோக்கி அசிட் நிறைந்த பல்புகள் வீசப்பட்டன இதில் 10 பேர் காயமடைந்தனர்.

நடிகர் சோ மேடைக்குக் கீழ் குனிந்து காயம் படாமல் தப்பித்துக் கொண்டார்,

கலவரம் அடங்கியதும் நடிகர் சோ மீண்டும் பேசினார்.

இது என் மீது நடத்தப்பட்ட இரண்டாவது தாக்குதல் ஆகும். முதல் தாக்குதல் அண்மையில் சென்னையில்மேற்கொள்ளப்பட்டது.

எம். ஜி. ஆர் மற்றும் ஆளுநர் ஆட்சிகள் இருந்த போது இப்படியான தாக்குதல்களுக்கு இடமில்லாது இருந்தது— இப்படி சோ சொன்னார். (எ)

ஞானக்கதிர்
அன்பு-அறநெறி – ஆன்மீகம்

இந்துசமய மாத மஞ்சரி
இரண்டாவது இதழ் வெளிவந்துவிட்டது!

★ திருமுறை பாடக் கேட்டுத் திளைத்த யோகர்
★ மகாத்மாவை மிஞ்சியவர் திருநீலகண்டர்
★ நினைப்பவர் மனமே கோயில்
★ நல்ல நாடு எது?
★ பிறந்தநாள் விழா பற்றிய சமயக் கண்ணோட்டம்
★ உயிர் வளர்க்கும் மூவாயிரந்தமிழ்
★ வேதத்தில் பொதிந்த விஞ்ஞானம்
★ ஓர் அடி வைத்தால் பத்தடி வைக்கும் இறைவன்

மற்றும் கருத்தாழம் மிக்க கட்டுரைகள், சமயச் சிறுகதைகள், கவிதைகள் மிளிர ஒளிவீசுகிறது ஞானக்கதிர்!

ஆதிபராசக்தியின் பலவர்ண முகப்புப் படத்துடன் விற்பனையாகிறது !!

சமய அறிவைப் பெருக்க ஞானக்கதிர் படியுங்கள்!!!

உதயன் — சஞ்சீவி விற்பனை முகவர்களிடம் கேட்டு வாங்குங்கள். விலை: ரூ. 5/-

(சி/3064)

உ

## ஆத்ம சாந்திக்கிரியை அழைப்பு

அன்புடையீர்,

சென்ற 11-7-1989 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது தந்தையார்

### பிரம்மஸ்ரீ இ. குமாரசாமிக்குருக்கள்

அவர்களின்

ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் நாட்களில் நடைபெறும்.

20-07-1989 வியாழன் தசாகம் (பகல் 10-00 மணி)
21-07-1989 வெள்ளி ஏகோதிஷ்டம். மாசிகம்
22-07-1989 சனி சபிண்டீகரணம்
23-07-1989 ஞாயிறு கிரகயக்ஞம், சாமாராதனை

நல்லூர், மனோன்மணி அம்மன் கோவில் இல்லத்தில் நடைபெறும் மேற்படி கிரியைகளில் கலந்துகொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
மக்கள், மருமக்கள்.

(11569)

## சிவாஜிலிங்கத்தை பிரேமா பார்வையிட்டார்

சுடப்பட்டு காயமுற்ற நிலையில் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரத்தை ஜனாதிபதி திரு. பிரேமதாஸா நேற்று சென்று பார்வையிட்டார். (உ-எ)

## கலைஞர் வேதனை

சென்னை, ஜுலை 19

திரு உமாமகேஸ்வரன் கொலை செய்யப்பட்டது குறித்து தமிழக முதலமைச்சர் திரு கருணாநிதி நேற்று வேதனை தெரிவித்தார்.

## பஸ் சேவை பற்றி சில தினங்களில் முடிவு

யாழ்ப்பாணம் ஜுலை 19

வட பிராந்திய போக்குவரத்துச் சேவை வவுனியாவுக்கு அப்பாலான தனது சேவைகளை ஆரம்பிப்பது பற்றி இன்னும் ஒரு சில தினங்களில் முடிவு செய்ய உள்ளது.

தென் பகுதியில் மேற்கொள்ளப் பட்டு வந்த வேலைநிறுத்தம் காரணமாகவவுனியாவுக்கு அப்பாலான வ.பி.போ. சபை இடைநிறுத்தி இருந்தது தெரிந்ததே. (ஒ-9)

## உமாமகேஸ்வரன் கொலை....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் கொள்கைகளும், நடைமுறைகளும் எவ்வாறு இருந்தபோதிலும், இந்தப் படுகொலைச் சம்பவத்தை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வன்மையாகக் கண்டிக்கின்றது.

இக்கொலைச் சம்பவம் கொழும்பிலேயே நடைபெற்றுள்ளமையால் அரசுடன் ஏற்பட்டுள்ள உடன்பாட்டின் அடிப்படையிலேயே இக்கொலையும் நிகழ்ந்துள்ளது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

தமிழர் இயக்கங்களின் தலைவர்களை படுகொலை செய்யும் நிகழ்வுகள் தொடர்ந்து நிகழ்வதாலும், இலங்கை இந்திய ஒப்பந்தத்தை ஏற்று ஜனநாயக வழிமுறைகளுக்கு திரும்பிய இயக்கங்களையும், தலைவர்களையும் இலங்கை அரசே குறிப்பிட்ட வழிமூலம் கொலை செய்யும் நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாகவே நாம் கருதவேண்டியுள்ளது.

அமிர்தலிங்கத்தினதும், யோகேஸ்வரனினதும் கொலையோடு சம்பந்தப்பட்டவர்கள் யார் என்று பகிரங்கப்படுத்தப்பட்ட பின்னரும், இக்கொலைகளின் சூத்திரதாரிகளை இனங்கண்டு கொள்ள அதிக நேரம் தேவையில்லை.

ஜனநாயகரீதியாக பாராளுமன்றத்திற்குத் தெரிவான வடகிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்க, இலங்கை அரசினால் நடாத்தப்பட்ட தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மாகாண அரசும் உறுப்பினர்களும் இருக்க, தமிழர் பிரச்சினை தொடர்பாக வேறு குழுவினரோடு இரகசியப் பேச்சுக்களை அரசு மேற்கொண்டு வருகிறது என்பதை தமிழ் பேசும் மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஆகவே தமிழ்பேசும் மக்கள் இலங்கை — இந்திய ஒப்பந்தத்தை ஒரு அத்திவாரமாகக் கொண்டு, எமது அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்துமுன்னேறக்கூடிய சூழ்நிலைகள் உருவாகியுள்ள இத்தருணத்தில், தமிழ்பேசும் மக்களின் அபிலாசைகளைப் பூண்டோடு அழித்தொழிக்கும் முயற்சியில் இலங்கை அரசும் வெற்றிகண்டுள்ளது.

இத்தகைய துரோக நடவடிக்கைகளின் மூலமும், தமிழர் விரோதக் கூட்டுக்களின் மூலமும் தமிழ்பேசும் மக்களின் விடுதலைப் போராட்டத்தை எக்காலத்திலும் தடுத்து நிறுத்தவோ, திசை திருப்பவோ முடியாதென்பதை இச்சந்தர்ப்பத்தில் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

## நூலகவியல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம் ஜுலை 19

யாழ்-பல்கலைக்கழக நூலகத்தின் ஆதரவில் நூலகவியல் கருத்தரங்கும், செயல்முறைப் பயிற்சியும் நாளை முதல் மூன்று நாட்கள் நடைபெறவிருக்கின்றன. (உ-3)

## அரச ஊழியர் சூட்டுக்குப் பலி

யாழ்ப்பாணம், ஜுலை 19

வவுனிக்குளத்தில் கடந்த வார மத்தியில் அரச ஊழியர் ஒருவர் கடமை நேரத்தில் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

மரணமானவர் சில்லாலையைச் சேர்ந்த மரியாம்பிள்ளை வில்லியம் ஜெயராஜா (வயது 40) என்பவர் ஆவார்.

இவர் வவுனிக்குள நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பணிபுரிந்து வந்தார். (ஒ)

## தந்தங்கள்.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சொல்லப்பட்டது.

தந்தங்களுக்காக யானைகளைக் கொல்வதைத் தடுக்கவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக ஜனாதிபதி தெரிவித்தார். (உ-எ)

## இந்தியத் தூதரகங்களில்......

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அயலுறவுத்துறைக்கும், உளவுத்துறைகளுக்கும் அனுப்ப ஏற்பாடு செய்தனர்.

இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் லக்கன்லால் மெர்ஹோத்ராவுக்கும் இந்த முடிவுகள் பற்றி தெரிவிக்க ஏற்பாடாயிற்று. பிரதமரின் செயலகத்தில் இணைச்செயலாளராய் இருக்கும் ஐ.எப்.எஸ். அதிகாரியான ரோனேன் சென் "ஹொட்லைன்" மூலம் மெர்ஹோத்ராவிடம் விஷயத்தைச் சொல்லியிருக்கிறார். இரண்டு பக்க முடிவுகளைப் படித்தும் காண்பித்திருக்கிறார்

இவ்வளவும் ஆன பிறகு தான், அயலுறவுத் துறையினருக்கு 'ஞானோதயம்' வந்தது. இந்தப் பேச்சை, 'எலெக்ட்ரோனிக்' கருவிகளின் உதவியுடன் ஒட்டுக் கேட்பார்களோ என்று அஞ்சினர்.

அதன் விளைவாய், மேலிடத்து அனுமதியுடன், 24 மணி நேரத்துக்குள் அயலுறவுத் துறைச் செயலாளர் எஸ். கே. சிங், ரோனேன் சென் ஆகியோரின் அறைகளில் 'ஃபேக்ஸ்' இயந்திரம் பொருத்தப்பட்டது.

இலங்கையிலும், லக்கன்லால் மெர்ஹோத்ராவின் அறையில் 'ஃபேக்ஸ்' இயந்திரம் பொருத்தப்பட்டிருக்க வேண்டும். இப்போதெல்லாம் அதன் மூலம் தான், மெர்ஹோத்ராவும், ரோனேன் சென்னும் தகவல்களைப் பரிமாறிக்கொள்கிறார்கள். இங்கிருந்து ரோனேன் சென் செலுத்தும் தகவல், இலங்கையில் மெர்ஹோத்ராவின் அறையில் பதிவாகிவிடும் என்பதால், விஷயம் 'லீக்' ஆவதற்கான வாய்ப்புகள் குறைவு.

ஜுன் மாதத்தில் மட்டுமே, ரோனேன் சென்னும், மெர்ஹோத்ராவும் 'ஃபேக்ஸ்' உதவியுடன் சுமார் 250 ரகசியச் செய்திகளைப் பரிமாறிக்கொண்டுள்ளனர்.

'ஃபேக்ஸ்' இயந்திரம் தான் ரகசியச் செய்திப் பரிமாற்றத்துக்கு உதவியாய் இருக்கும் என்பதால், உலகின் 14 முக்கிய நகர்களில் இருக்கும் (எல்லாமே வெவ்வேறு நாடுகளின் தலைநகர்கள்) இந்தியத் தூதுவரகங்களில் அவசர அவசரமாய் 'ஃபேக்ஸ்' வசதி செய்து தரப்பட்டுள்ளது.

பிரதமரின் செயலகத்திலிருந்து ரோனேன் சென்னோ, அயலுறவுத் துறை அலுவலகத்திலிருந்து எஸ்.கே.சிங்கோ அனுப்பும் செய்திகள், இந்தியத் தூதுவரகத்திற்கு நேரடியாகப் போய்ச் சேர்ந்துவிடுகின்றன. அதுவும் இந்தியத் தூதுவரின் அறையில் இருக்கும் 'ஃபேக்ஸ்' இயந்திரத்திலேயே அவை பதிவாகி விடுகின்றன. தூதுவரின் உதவியாளர்களுக்கோ, சுருக்கெழுத்தாளர்களுக்கோ கூட இது காட்டப்படுவதில்லை.

பாகிஸ்தானுக்கான இந்தியத்தூதுவர் ஜே.என். தீட்சித், ஐ.நா. சபையில் இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதியாக இருக்கும் சி. ஆர். கரேகான், ரஷ்யா, அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கான இந்தியத் தூதுவர்கள் ஆகியோர் 'ஃபேக்ஸ்' வசதி பெற்றவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

சுமார் ஒரு மாத காலத்தில், இரண்டு கோடி ரூபாய் செலவு செய்து, 'ஃபேக்ஸ்' வசதி செய்யவேண்டிய அவசியம் என்ன?" என்று பலரும் கேட்கிறார்கள்

இலங்கைப் பிரச்சினையை சர்வதேச அளவில் எழுப்ப இலங்கை அரசு முயலலாம் என்று இந்தியா நினைப்பது தான் அதற்குக் காரணமாய் இருக்கக்கூடும்.

இலங்கையின் புகார்களுக்கு, உலகெங்கிலுமுள்ள இந்தியத் தூதுவரகங்கள் உடனுக்குடன், தடுமாறாமல் பதில் சொல்லியாகவேண்டுமே!

## மணிலா,..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செல்ல முயற்சித்து வருவதாகவும் இத்தமிழர்கள் அதிகாரிகளிடம் தெரிவித்தனர்.

பிலிப்பீன்ஸ் வழியாக ஜப்பான் செல்வதே இத் தமிழரின் நோக்கம் என்று குடியகல்வு முகவர்கள் தெரிவித்தனர்.

அகதிகளுக்குரிய தகுதிகள் காணப்படாதவிடத்து அவர்களை இலங்கைக்கு நாடு கடத்துவோம்—இப்படி குடியகல்வு ஆணையாளர் திரு. அலனோ தெரிவித்தார். (உ—எ)

## உமா மகேஸ்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வர் என்று இரண்டு பொலீஸ் அதிகாரிகள் பெரும்பாலும் அடையாளங்கண்டனர்- என்று அப்பேச்சாளர் சொன்னார்.

நேற்று கொழும்பு ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைத்து, இறந்தவர் திரு. உமாமகேஸ்வரன் என்று அவரது மனைவியும் உறவினர்களும் அடையாளங்காட்டினர்.

அவர் வசம் இருந்ததாகக் கூறப்படும் பையில் என்ன பொருள்கள் இருந்தன என்பது குறித்து தகவல் தர பொலீஸ் வட்டாரங்கள் மறுத்துவிட்டன. (உ-11)

## அமைதிப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருப்பது மிகவும் மோசமான பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

அத்துடன் இந்தியாவின் கௌரவத்தைக் குறைக்கும் வகையில் பல்வேறு குழப்பங்களுக்கும் அது வழிவகுக்கும்.

எனவே இலங்கையில் இருந்து இந்திய அமைதிப்படை உடனடியாக வாபஸ் பெற வேண்டும்.

இப்படி தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது. (உ-எ)

## தேடுதலில் இளைஞர் மரணம்

பச்சிலைப்பள்ளி ஜுலை 19

முகமாலை சிவலைப்பிட்டி பகுதி செவ்வாய்க்கிழமை காலை சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

இத்தேடுதலின் போது இளைஞர் ஒருவர் சயனைட் அருந்தி மரணமானார். (உ-11)

## நன்றி அறிவித்தல்

கடந்த 12 ஆம் திகதி வவுனிக்குளத்தில் கடமையின் போது சுட்டுக்கொல்லப்பட்ட எனது சகோதரன்

### திரு. வில்லியம் ஜெயராசா

(நீர்ப்பாசனத் திணைக்களம் – வவுனிக்குளம்)

அவர்களின் மரணச்சடங்குகளில் பங்குகொண்ட குருக்கள், கன்னியர்கள், சில்லாலை - கரம்பன் - மண்டைதீவு - அல்லைப்பிட்டி பங்கு மக்கள், மற்றும் அனைவருக்கும் அன்பார்ந்த நன்றிகள்.

அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை
(... பங்குத் தந்தை)

(11572)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நவரத்தினராசா தெய்வநாயகம்

சரசாலை வடக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த காலஞ்சென்ற முன்னைநாள் பொலிஸ் உத்தியோகத்தர் இ. நவரத்தினராசா அவர்களின் அன்பு மனைவி தெய்வநாயகம் (நல்லம்மா) காலமாகிவிட்டார். இவர் திருச்செல்வம் (S.H.S Office, Jaffna) அருட்செல்வம் (Shabra, Colombo) புனிதராசா (Houstan), நாகராசா (Chavakachcheri M. P. C. S), அருட்சோதி, அருட்தேவி, நாகேஸ்வரி, நாகராணி (Germany), காந்தமலர் (Canada) ஸ்ரீஸ்கந்தராசா (London), கிருஷ்ணகுமார் (Germany) ஆகியோரின் அன்புத் தாயாரும் நவமலர், கௌசலாதேவி, வசந்தி, தவதாம்பிகை, காலஞ்சென்ற இரத்தினராசா (C. T. B. Jaffna). கைலாசபதி (தொழில் திணைக்களம், பரந்தன்), கலையரசன் France) லோகேஸ்வரன் (Germany), ஸ்ரீதரன் (Canada) ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி சோமசுந்தரம் நாகம்மா (Germany) திருமதி இராசேந்திரம் இராசம்மா ஆகியோரின் சகோதரியும், இராசமணி ஈஸ்வரபாதம் (இளைப்பாறிய பொலிஸ் இன்ஸ்பெக்டர்) நடராசா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனியும், மோகன் பாஸ்கரன், மதியழகன், கண்ணன், மோகனதாஸ், பரம்நாத், ஜெயவதனி, ஜெகமகள், பிரணவன் சிவாந்தி, கவிதா, வசந்தராசன், வசந்தன், துவாரகி, காயித்திரி, கவிராஜ், சுதர்சன், சுகிவன், அகல்யா, சயந்தி, சாத்வீகன், அகிம்சா, கிருஷான், வித்யா, ஸ்ரவீனியா, ஸ்ராவான் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்:

தகவல்:
ந. அருட்செல்வம்

தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

(C/ 2911)

### திருமதி சிவக்கொழுந்து சண்முகநாதன்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மேற்கு 1-ம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி சிவக்கொழுந்து காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற வி. நா. சண்முகநாதன் (மலாயன் பென்சனியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நமசிவாயம் ஆறுமுகம் பெண் வள்ளியம்மை அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் பசுபதிப்பிள்ளை (விதானையார்) அவர்களின் அன்பு மருமகளும், மலாயன் பென்சனியர் ஆறுமுகம் அம்பலவாணர், இலங்கைப் புகையிரதப் பகுதி பிரதம பொறியியலாளர் ந. ஆறுமுகம் வைத்தியலிங்கம், காலஞ்சென்ற ஆறுமுகம் சோமசுந்தரம், காலஞ்சென்ற மாணிக்கம் பெண் இராசம்மா, காலஞ்சென்ற நல்லதம்பி பெண் பாறுவதி, காலஞ்சென்ற தில்லையம்பலம் பெண் சிவகாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 19-07-1989 புதன்கிழமை பகல் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மணற்காடு மயானத்திற்கு பிற்பகல் 3-00 மணியளவில் எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
தி. சதாசிவம்

புங்குடுதீவு-1; (11571)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 19-07-1989இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.